பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 05 2025 **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்திய ராணுவத்தின் துணிச்சலை உலக நாடுகள் பாராட்டுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. மின் கணக்கீடு பணிகளுக்கு ஸ்மார்ட் மீட்டர்களை பயன்படுத்துமாறு மாநில அரசுகளை, மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் வலியுறுத்தியுள்ளார்.

3. மாணவர்களுக்கு தேவையான சாதி, வருமானச்சான்றிதழ்கள் விண்ணப்பித்த ஒருவாரத்திற்குள் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

4. அரபிக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Reyes Varela** இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**இந்திய ராணுவத்தின் துணிச்சலை உலக நாடுகள் பாராட்டுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் எல்லை பாதுகாப்புப்படை விருது வழங்கும் விழாவில் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் மூலம் பஹல்காம் தாக்குதலுக்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்துள்ளது என்றார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் உறுதியான தலைமையின்கீழ், துல்லியமான புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் இந்திய பாதுகாப்புப்படையினர் திறம்பட பணியாற்றி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுக்கு எதிரான பதிலடி நடவடிக்கை வாயிலாக எல்லை பாதுகாப்புப்படை மற்றும் ராணுவப்படைகள் நாட்டின் பாதுகாப்பு வலிமை மற்றும் துணிச்சலை வெளிப்படுத்தி இருப்பதாகவும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்திய வேளையில், அந்நாட்டு ராணுவம் இந்தியாவில் பொதுமக்கள் வசிக்கும் பகுதி மற்றும் ராணுவ நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

**<<<<<>>>>>>**

மின் கணக்கீடு பணிகளுக்கு ஸ்மார்ட் மீட்டர்களை பயன்படுத்துமாறு மாநில அரசுகளை, மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் இன்று தென்மாநில மின்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், மின்சார விநியோக கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், பசுமை எரிசக்தித் திட்டங்களை அதிக அளவில் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்க, மின்துறையில் எதிர்காலத்துக்கு உகந்த நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நுகர்வோருக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வழங்குவது குறித்து, மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறும் மாநில அரசுகளை, திரு மனோகர்லால் கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில் பங்கேற்று பேசிய தமிழக மின்துறை அமைச்சர் திரு சிவசங்கர், குறைந்த விலையில் மின் விநியோகம் செய்வதில், மாநில அரசு உறுதியாக உள்ளதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் எரிசக்தி சேமிப்புத்திறனை அதிகரிக்கும் வகையில், 20 ஆயிரம் மெகாவாட் நீரேற்று மின் திட்டங்களையும், மின்கலன் எரிசக்தி சேமிப்பு அமைப்புகளையும் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<<>>>>>

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் விரைவில் திறக்கப்பட உள்ள நிலையில், மாணவர்களுக்கு தேவையான சாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ் உள்ளிட்டவற்றை விண்ணப்பித்த ஒருவார காலத்திற்குள் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பாளையம்பட்டியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - கே கே எஸ் எஸ் ஆர் - 25 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

மண்பாண்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில், மத்திய அரசின் கைவினைப்பொருட்கள் அபிவிருத்தி ஆணையம் சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், வேலூர் மாவட்டத்தில் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு இயந்திரத்தால் இயங்கும் சக்கரங்கள் வழங்கப்பட்டது.

இது, தங்களுக்கு பேருதவியாக இருக்கும் என பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<<>>>>>

அரபிக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***('Voice Byte - ' செந்தாமரை கண்ணன் (1) - 25 Sec.)***

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த சில தினங்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்றும் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

இதனிடையே, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுலாப்பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்களை மாநில வேளாண்துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் விழுப்புரத்தில் இன்று பொதுமக்களிடம் வழங்கினார்.

---------------

காஞ்சிபுரம் மாவட்டம் கோவிந்தவாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் சுமார் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள வகுப்பறை கட்டுமானப்பணியை மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் பட்டா மாறுதல் மற்றும் பட்டா நகல் வேண்டி பொதுமக்கள் அளித்த மனுக்களுக்கு ஆட்சியர் திருமதி உமா, இன்று உடனடி தீர்வு வழங்கினார்.

----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் சார்பாக, தனியார் வேலைவாய்ப்பு முகாம் நாளை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி அழகுமீனா தெரிவித்துள்ளார்.

--------------------

துணிச்சலான வீர தீர சாகச செயல்புரிந்த பெண்களுக்கான கல்பனா சாவ்லா விருதுக்கு தகுதியானவர்கள் **awards.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் அடுத்த மாதம் 16-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

-------------

ஆவடி மாநகராட்சியில் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் கால்நடைகளை பிடிக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாக மாநகர சுகாதார அலுவலர் தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Miguel Reyes Varela** இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

வடக்கு மாசிடோனியாவில் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-3 என்ற செட் கணக்கில், பிரேசிலின் **'Marcelo Demoliner – Zormann da Silva** இணையை வென்றது.

---------------

மலேசியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 24-22, 17-21, 22-20 என்ற செட் கணக்கில், பிரான்சின் **Toma Junior**-ஐ வென்றார்.

----------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்றுவரும் அகில இந்திய ஹாக்கிப்போட்டியில் சென்னை **Income Tax** அணிக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி, ஜூன் ஒன்றாம் தேதிவரை நடைபெறுகிறது.

**<<<<<>>>>>**